www.testpapersfree.com

605 / 10

Q1 முதல் Q25 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு

'அ' பிரிவு

A1 வேற்றுமை

Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q1 ஜ௵ரோங் சாலையில் ஒரு பெரிய மரம் __________ சாய்ந்ததால் சாலையின் ஒரு பகுதி அடைப்பட்டுப் போனது.

(1) வேரில்
(2) வேரை
(3) வேரால்
(4) வேரோடு

Q2 திவாகரன் கணக்குப் பாடத்தில் சிறப்பாக __________ கண்ட அவனுடைய ஆசிரியர்கள் அவனைப் பாராட்டினார்கள்.

(1) முன்னேறியதை
(2) முன்னேறியதால்
(3) முன்னேறியதற்கு
(4) முன்னேறியதோடு

Q3 வாழ்க்கையில் நாம் எவ்வளவு உயர்ந்தாலும் __________ இருப்பதே சிறப்பு.

(1) தன்னடக்கத்தை
(2) தன்னடக்கத்திற்கு
(3) தன்னடக்கத்துடன்
(4) தன்னடக்கத்திலிருந்து

www.testpapersfree.com

Q4 பாசிர் ரிஸ் வட்டாரத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட __________ சிறுவர் விளையாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

(1) நூலகத்தில்
(2) நூலகத்தை
(3) நூலகத்திற்கு
(4) நூலகத்திலிருந்து

Q5 ஒரு சிறு மீன்பிடி கிராமத்தைத் தனது __________ ஒரு நவீன நகரமாக மாற்றியமைத்தவர் நமது முன்னாள் பிரதமர் திரு லீ குவான் யூ.

(1) திறமைக்கு
(2) திறமையால்
(3) திறமையுடன்
(4) திறமையோடு

www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q6 ஒப்புரவு __________.

(1) எழு

(2) பழகு

(3) ஒழுகு

(4) ஒழியேல்

Q7 __________ அழகு வரும்பொருள் உரைத்தல்.

(1) அரசர்க்கு

(2) மந்திரிக்கு

(3) உண்டிக்கு

(4) அறிஞர்க்கு

Q8 மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் __________.

(1) உறவு

(2) மருந்து

(3) விருந்து

(4) உணர்வு

www.testpapersfree.com

Q9 நிழலின் __________ வெயிலில் தெரியும்.

(1) சிறுமை

(2) கருமை

(3) அருமை

(4) பெருமை

Q10 கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே

__________ எல்லாம் மழை.

(1) தடுப்பதூஉம்

(2) எடுப்பதூஉம்

(3) தொடுப்பதூஉம்

(4) கொடுப்பதூஉம்

www.testpapersfree.com

<u>A3 அடைமொழி/எச்சம்</u>

**Q11** முதல் **Q15** வரையுள்ள <u>அடைமொழி/எச்சத்தை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், **அந்த** விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q11 நித்யா தன் தாயார் __________ இனிப்பான பொங்கலை ருசித்து உண்டாள்.

(1) சமைத்த
(2) சமைத்து
(3) சமைக்கிற
(4) சமைக்கும்

Q12 இந்திய மாணவர்கள் தமிழ்மொழியை __________ பேச ஊக்குவிக்க தமிழ்மொழி மாதத்தில் பல நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன.

(1) சரியான
(2) சரளமாக
(3) தெளிவான
(4) அழுத்தமாக

Q13 காவியா சிறுகச் சிறுக __________ பணத்தைக் கொண்டு தன்னுடைய பட்டப் படிப்பைப் படித்தாள்.

(1) கட்டிய
(2) சேமித்த
(3) உழைத்த
(4) எண்ணிய

Q14 கோழிக்குஞ்சுகள் பஞ்சு போன்ற __________ இறகுகளைக் கொண்டவை.

(1) வெண்மையான
(2) வெண்மையாக
(3) மென்மையாக
(4) மென்மையான

www.testpapersfree.com

Q15 மறைந்த குத்துச்சண்டை வீரர் முகம்மது அலியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள ஆயிரக்கணக்கான மக்கள் ________ வந்தனர்.

(1) கூடி
(2) திரண்டு
(3) சேர்ந்து
(4) இணைந்து

A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16** முதல் **Q20** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

ஒரு வியாபாரிக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். வியாபாரிக்குத் தனது மூத்த மகன்மீது அளவில்லா அன்பு இருந்ததால் தனது சொத்து முழுவதையும் அவனுக்கே தர Q16__________. இதை அறிந்த வியாபாரியின் மனைவி தன்னுடைய இளைய மகனின் எதிர்காலத்தை Q17__________ மிகுந்த கவலையுற்றார். ஒரு நாள் அவர் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தபோது அவ்வழியாக ஒரு ஞானி வந்தார். அவர் வியாபாரியின் மனைவியின் Q18__________ கவனித்து அவரிடம் நடந்ததை விசாரித்தார். வியாபாரியின் மனைவியும் நடந்ததை விளக்கினார்.

ஞானி அவரிடம், "நீங்கள் உடனே உங்கள் இரு புதல்வர்களையும் அழைத்து, சொத்துக்கு Q19__________ உள்ளவன் மூத்த மகனே என்றும் இளைய மகனுக்கு எதுவும் கிடைக்காது என்றும் சொல்லிவிடுங்கள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நம்புங்கள்," என்று கூறினார். வியாபாரியின் மனைவியும் அவ்வாறே செய்தார். அதைக் கேட்ட இளைய மகன் மனம் Q20__________ போய், வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டான். அங்கே அவன் தொழில் பயிற்சி பெற்று, வியாபாரம் செய்யத் தொடங்கினான். நாளடைவில் அவன் பெரும் செல்வந்தன் ஆனான்.

Q16 (1) தீர்மானித்தார்

(2) யோசித்தார்

(3) அஞ்சினார்

(4) முயன்றார்

www.testpapersfree.com

Q17 (1) புரிந்து

(2) அறிந்து

(3) தெரிந்து

(4) நினைத்து

Q18 (1) முகவாட்டத்தை

(2) முகமலர்ச்சியை

(3) தோற்றத்தை

(4) எண்ணத்தை

Q19 (1) தேவை

(2) உரிமை

(3) விருப்பம்

(4) பொறுப்பு

Q20 (1) உருகி

(2) நொந்து

(3) குளிர்ந்து

(4) நெகிழ்ந்து

www.testpapersfree.com

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

மன்னன் ஒருவன் தன்னுடைய வீரர்களுடன் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். நீண்ட நேரம் வேட்டையாடியதால், களைப்படைந்த அவன் அருகிலிருந்த ஏரிக்கரையில் இளைப்பாறினான். அப்போது இரவு நேரம். வானத்தில் நிலா பிரகாசமாக ஒளி வீசியது.

மன்னன் ஏரியைப் பார்த்தபோது, ஏரியின் நடுவில் வைரமாலை ஒன்று பளபள என்று மின்னிக்கொண்டிருந்தது. உடனே மன்னன் தன்னுடைய வீரர்களிடம் ஏரியில் குதித்து வைரமாலையை எடுத்துவர உத்தரவிட்டான். வீரர்களும் ஏரியில் குதித்து நீண்ட நேரம் வைரமாலையைத் தேடினார்கள். ஆனால், அவர்களால் அதனைக் கண்டுபிடிக்க **இயலவில்லை.** அப்போது அரசன் ஏரியில் உள்ள நீரை வெளியே இறைத்தால், எளிதாக வைரமாலையை எடுக்கலாம் என்று எண்ணினான். வீரர்களுக்கு உதவியாக அவ்வூர் மக்களும் ஏரியில் உள்ள நீர் முழுவதையும் இறைத்துவிட்டு, சேற்றில் வைரமாலையைத் தேடினர். அப்படியும் வைரமாலை கிடைக்கவில்லை.

மீண்டும் ஏரியில் தண்ணீர் நிரப்பப்பட்டது. ஏரியின் நடுவே வைரமாலை ஜொலித்தது. குழப்பமடைந்த மன்னன் செய்வதறியாமல் திகைத்தான். அப்போது அவனுக்கு அவ்வூரில் வசித்த அறிஞர் ஒருவரின் ஞாபகம் வந்தது. மன்னன் உடனே அவரை வரவழைத்து, நடந்ததை விவரமாக விளக்கினான். அறிஞர் ஆழ்ந்து சிந்தித்தார். அவர் ஏரியைச் சுற்றி நடந்தார். அங்கிருந்த உயரமான பனைமரத்தை உற்றுக் கவனித்தார். அவருக்கு உண்மை புரிந்தது. உடனே அறிஞர், "அரசே! ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவரச் சொல்லுங்கள்!" என்றார். வீரர்கள் கொண்டுவந்த பாத்திரத்தை, அவர் ஏரிக்குப் பக்கத்தில் வைத்தார். பாத்திரத்தில் வைரமாலை தெரிந்தது. அறிஞர் அதைச் சுட்டிக்காட்டி, "அரசே! வைரமாலை ஏரியில் இல்லை. நீங்கள் ஏரியிலும் தண்ணீர் பாத்திரத்திலும் காண்பது வைரமாலையின் பிம்பம் தான்! ஏரிக்கரையிலுள்ள பனைமரத்தில் பறவைக்கூடு இருக்கிறது. வைரமாலை அதில்தான் இருக்கவேண்டும்," என்று விளக்கினார்.

www.testpapersfree.com

மன்னன் வீரர்களைப் பனைமரத்தில் ஏறி வைரமாலையைத் தேடக் கட்டளையிட்டான். வீரர்களும் அவ்வாறே பறவைக்கூட்டில் தேடியபோது, வைரமாலை அதனுள் இருந்தது. வீரர்கள் அதை எடுத்து மன்னனிடம் ஒப்படைத்தார்கள். மன்னன் அறிஞரின் புத்திக்கூர்மையைப் பாராட்டி அவருக்குப் பரிசு வழங்கினான்.

Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q21 மன்னன் எப்போது வைரமாலையைக் கண்டான்?

(1) ஏரிக்கரையில் ஓய்வெடுத்தபோது
(2) வேட்டையாடி களைப்படைந்தபோது
(3) வீரர்களுடன் காட்டிற்குப் போனபோது
(4) காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்தபோது

Q22 அரசன் ஏரியிலுள்ள நீரை இறைக்கச் சொல்லக் காரணம் என்ன?

(1) வைரமாலையைத் தெளிவாகப் பார்க்க
(2) வைரமாலையை வீரர்கள் எளிதாகத் தேட
(3) வைரமாலையை ஊர்மக்கள் சேற்றில் தேட
(4) வைரமாலையைச் சுலபமாக வெளியே எடுக்க

Q23 மன்னன் எதனால் அறிஞரை வரவழைத்தான்?

(1) நடந்ததை அவரிடம் கூற விரும்பியதால்
(2) ஏரியைச் சுற்றி நடக்க வேண்டும் என்பதால்
(3) குழப்பத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதால்
(4) எப்படியாவது வைரமாலையை பெற விரும்பியதால்

Q24 அறிஞர் மன்னருக்கு எப்படி உண்மையை விளக்கினார்?

(1) ஏரியில் தெரிவது வைரமாலை இல்லை என்பதைப் புரிய வைத்து
(2) தண்ணீர் பாத்திரத்தில் வைரமாலை உள்ளது என்பதைச் சொல்லி
(3) பாத்திரத்திலும் ஏரியிலும் தெரிவது வைரமாலையின் பிம்பம் என்பதைக் கூறி
(4) பனைமரத்தில் உள்ள பறவைக்கூட்டில்தான் வைரமாலை உள்ளது என்று காட்டி

www.testpapersfree.com

<u>சொற்பொருள்</u>

வினா Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)

Q25 இயலவில்லை

(1) புரியவில்லை

(2) முடியவில்லை

(3) தெரியவில்லை

(4) உணரவில்லை

www.testpapersfree.com

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

Q26 அன்று என் அப்பாவின் பிறந்தநாள். நான் அவருடைய பெயர் ____________ பேனாவைப் பரிசாகத் தந்தேன். Q26. ( )

Q27 நானும் என் தங்கையும் எங்கள் பாட்டி வீட்டிற்குச் சென்றோம். பாட்டி எங்களைக் கட்டி ____________ முத்தமிட்டார். Q27. ( )

Q28 முரளி இளகிய ____________ கொண்டவன். அவன் ஏழை எளியவர்களுக்குப் பண உதவி செய்வான். Q28. ( )

Q29 கடற்கரையில் ஒரு பெரிய நண்டைக் கண்டேன். அது தன் ____________ நோக்கிச் சென்றது. Q29. ( )

| | | | |
|---|---|---|---|
| (1) | மனம் | (2) | அனைத்து |
| (3) | பொரிக்கப்பட்ட | (4) | வலையை |
| (5) | வளையை | (6) | மணம் |
| (7) | அணைத்து | (8) | பொறிக்கப்பட்ட |


www.testpapersfree.com

<u>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

சிங்கப்பூர் இளையர் மன்றமும் இன நல்லிணக்கக் கழகமும்
பெருமையுடன் வழங்கும்

# வேற்றுமையில் ஒற்றுமை
# உணவு விழா



***நாள்: 4 நவம்பர் 2016***
***இடம்: தேசிய சமூக மன்றம்***
***நேரம்: காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை***

| **இளையர்களுக்கான 'ரோஜாக்' (Rojak) செய்யும் போட்டி (13 - 20 வயதுக்குள்)** | **(6 முதல் 12 வயது) சிறார்களுக்குப் பழக்கலவை (Fruit salad) செய்யும் போட்டி** |
|---|---|

- தேவையான பொருள்களை எடுத்து வரவேண்டும்.
- காலை ஒன்பது மணிக்குள் வரவேண்டும்
- பல இனத்தவர்கொண்ட ஒரு குழுவாக இருக்கவேண்டும்
- 4 – 5 பேர்கொண்ட குழு




முதல் பரிசு - $300 பற்றுச் சீட்டு
இரண்டாம் பரிசு - $200 பற்றுச் சீட்டு
மூன்றாம் பரிசு - $100 பற்றுச் சீட்டு



**பிலிப்பீன்ஸ், மியான்மார், இந்தோனேசியா போன்ற ஆசிய நாட்டு உணவு வகைகளைச் சுவைத்து மகிழ காலை 11 மணிக்கு மேல் வரலாம்.**

போட்டியாளர்கள் அனைவருக்கும் ஆசிய உணவு சமையல் குறிப்புப் புத்தகம் இலவசமாகக் கிடைக்கும்.



போட்டியில் பங்கெடுக்க விரும்புவோர் நேரடியாகச் சிங்கப்பூர் சமூக மன்றத்தில் அக்டோபர் 31ஆம் தேதிக்குள் பதிவு செய்யவேண்டும்.

தொடர்புகொள்ளவேண்டிய எண்: 6753. 1286
**நிகழ்ச்சிக்கு ஆதரவு: *அனைத்துலக இளையர் மன்றம்***

www.testpapersfree.com

Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள் )

Q30 இந்த நிகழ்ச்சியின் ஆதரவாளர் யார்?

(1) சிங்கப்பூர் இளையர் மன்றம்
(2) தேசிய சமூக மன்றம்
(3) இன நல்லிணக்கக் கழகம்
(4) அனைத்துலக இளையர் மன்றம் ( )

Q31 போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் இளையர்கள் ......................

(1) காலை ஒன்பது மணிக்கு மேல் வரவேண்டும்
(2) இருபது வயதுக்குள் இருக்க வேண்டும்
(3) ஒரே இனத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட குழுக்களாக இருக்க வேண்டும்
(4) பழங்களைக் கொண்டுவர வேண்டும் ( )

Q32 ஆசிய நாட்டு உணவு வகைகளைச் சுவைக்க என்ன செய்யவேண்டும்?

(1) ஒரு குழுவாக வரவேண்டும்
(2) தேவையான பொருட்களைக் கொண்டு வரவேண்டும்
(3) காலை பதினொன்று மணிக்குப் பின் செல்ல வேண்டும்
(4) சிங்கப்பூர் சமூக மன்றத்தில் பதிவு செய்யவேண்டும் ( )

www.testpapersfree.com

Q33 நீ உன் நண்பன் ரவியை இந்த உணவு விழாவுக்கு அழைக்க விரும்புகிறாய். இவ்விழாவில் நடத்தப்படும் போட்டிகளில் வெல்பவர்களுக்கு என்னென்ன கிடைக்கும் என்பதை விவரித்து அவனுக்கு ஒரு குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள் )

அன்புள்ள ரவிக்கு,

நான் உன்னை உணவு விழா ஒன்றுக்கு அழைக்க விரும்புகிறேன்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

இப்படிக்கு

உன் நண்பன்

www.testpapersfree.com

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

<u>பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி</u>

ஒரு சமயம் தமிழ் நாட்டில் ஒரு சிறிய கிராமத்தில் விக்ரம் என்ற இளைஞன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய குடும்பம் ஏழ்மையில் வாடியது. இருப்பினும், அவன் தன் பெற்றோரின் பராமரிப்பில் களிப்புடன் வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள், நெடுந்தொலைவிலிருந்து ஒரு பாட்டியும் அவருடைய பேத்தியும் விக்ரம் வாழ்ந்த கிராமத்திற்கு வந்திருந்தனர். அவர்கள் மிகவும் சோர்ந்து காணப்பட்டனர். இதைக் கண்ணுற்ற விக்ரமின் குடும்பத்தினர் அவர்களைத் தங்கள் வீட்டில் தங்கும்படி கேட்டுக்கொண்டனர். இரவு உணவு உண்டபின் அனைவரும் உரையாடிக்கொண்டிருந்தனர். அத்தருணத்தில் சலங்கை ஒலியும் மத்தளச் சத்தமும் அனைவருடைய செவிகளுக்கும் கேட்டது. அவர்களின் வீட்டின் அருகே நடன நிகழ்ச்சி ஒன்று நடந்துகொண்டிருந்தது. அனைவருக்கும் நடனத்தைக் காண வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று.

நடன நிகழ்ச்சி முடிந்ததும் அவர்கள் வீடு திரும்பினர். உடனே, விக்ரம் தான் பார்த்த நடனத்தை ஒரு சிறு தவறுமின்றி அப்படியே ஆடிக் காண்பித்தான். இதைப் பார்த்த பாட்டியும் அவருடைய பேத்தியும் அசந்துபோயினர். உடனே, மூதாட்டி விக்ரமின் பெற்றோரிடம், "உங்கள் புதல்வனை எங்களோடு அனுப்பிவையுங்கள். அவனை நாட்டியத் துறையில் வல்லவனாக்கி உங்களிடம் மீண்டும் அனுப்பி வைக்கிறோம்," என்றார்.

அதைச் செவியுற்ற விக்ரமின் பெற்றோர் மகிழ்ந்தாலும் முன்பின் தெரியாதவர்களை எவ்வாறு நம்புவது என்று குழப்பமுற்றனர். இதைக் கவனித்த மூதாட்டி, "நானும் என் பேத்தியும் பரத நாட்டியத்தில் கைதேர்ந்தவர்கள். பரத நாட்டியத்தில் தலை சிறந்து விளங்கும் விஸ்வநாதரைக் காண்பதுதான் எங்கள் கனவு ஆகும். அவர் எதையும் ஒரு முறைதான் கற்றுக்கொடுப்பார். எங்களுக்கு ஒருமுறை பார்த்துக் கற்றுக்கொள்ளும் திறமை இல்லை. நாங்கள் அத்தகைய நினைவாற்றல் உடையவனைத் தேடிக்கொண்டு இருந்தோம். எங்கள் முயற்சி இப்போதுதான் பலனடைந்துள்ளது. ***<u>உங்கள் மகனுக்கு அந்த ஆற்றல் இயற்கையாகவே அமைந்துள்ளது</u>***" என்று கூறினார். தன் மகனைச் சிறந்த கல்விக்கூடங்களுக்கு அனுப்பிப் படிக்க வைக்கும் சக்தி அந்த ஏழைக் குடும்பத்தாருக்கு இல்லை. இதைச் செவியுற்றதும் விக்ரமின் பெற்றோர் அந்த மூதாட்டியின் யோசனைக்கு இணங்கினர். பெற்றோரின் முடிவை அறிந்த விக்ரமுக்கு எல்லையில்லா ஆனந்தம் ஏற்பட்டது.

www.testpapersfree.com

Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)

Q34 பாட்டியும் அவருடைய பேத்தியும் எதனால் விக்ரமின் இல்லத்தில் தங்கினர்? (3 மதிப்பெண்கள்)

Q35 எவை அனைவரையும் ஈர்த்தன? (2 மதிப்பெண்கள்)

Q36 பாட்டியும் அவருடைய பேத்தியும் திகைக்கக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

www.testpapersfree.com

Q37 விக்ரமின் பெற்றோர் ஏன் தயங்கினார்கள்? (3 மதிப்பெண்கள்)

Q38 பாட்டியும் அவருடைய பேத்தியும் எந்தக் கனவை நனவாக்கத் தங்கள் பயணத்தை மேற்கொண்டனர்? (4 மதிப்பெண்கள்)

Q39 ***உங்கள் மகனுக்கு அந்த ஆற்றல் இயற்கையாகவே அமைந்துள்ளது*** என்னும் வாக்கியத்தில் ***அந்த ஆற்றல்*** என்னும் சொற்றொடர் எதைக் குறிக்கின்றது? (3 மதிப்பெண்கள்)

www.testpapersfree.com

Q40 விக்ரமின் பெற்றோர் அவன்மீது அக்கறை கொண்டவர்கள் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்? (4 மதிப்பெண்கள்)

முற்றும்

www.testpapersfree.com

www.testpapersfree.com



# SEMESTRAL ASSESSMENT 2
## MOTHER TONGUE – TAMIL

## ANSWER KEY

| வேற்றுமை | செய்யுள் / பழமொழி | அடைமொழி/ எச்சம் | முன்னுணர்வுக் கருத்தறிதல் |
|---|---|---|---|
| 1. ( 4 )<br>2. ( 1 )<br>3. ( 3 )<br>4. ( 1 )<br>5. ( 2 ) | 6. ( 3 )<br>7. ( 2 )<br>8. ( 3 )<br>9. ( 3 )<br>10. ( 2 ) | 11. ( 1 )<br>12. ( 2 )<br>13. ( 2 )<br>14. ( 4 )<br>15. ( 2 ) | 16. ( 1 )<br>17. ( 4 )<br>18. ( 1 )<br>19. ( 2 )<br>20. ( 2 ) |
| **தெரிவுவிடைக் கருத்தறிதல்**<br>21. ( 1 )<br>22. ( 4 )<br>23. ( 4 )<br>24. ( 3 ) | **சொற்பொருள்**<br>25. ( 2 ) | | |

www.testpapersfree.com

## SEMESTRAL ASSESSMENT 2
## MOTHER TONGUE – TAMIL

## ANSWER KEY

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

Q26. (8)

Q27. (7)

Q28. (1)

Q29. (5)

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

Q30. (4)

Q31. (2)

Q32. (3)

Q33. போட்டியில் வெல்பவருக்கு முதல் பரிசாக 300 வெள்ளி பற்றுச்சீட்டும் ( 0.5 ), இரண்டாவது பரிசாக 200 வெள்ளி பற்றுச்சீட்டும் ( 0.5 ), மூன்றாவது பரிசாக 100 வெள்ளி பற்றுச்சீட்டும் ( 0.5 ), ஆசிய உணவு சமையல் குறிப்புப் புத்தகமும் இலவசமாகக் கிடைக்கும். ( 0.5 ) மொழி (2)

Q34. அவர்கள் நெடுந்தொலைவிலிருந்து வந்திருந்ததாலும் ( 1 ) மிகவும் சோர்ந்திருந்ததாலும் ( 1 ) விக்ரமின் இல்லத்தில் தங்கினர். மொழி ( 1 )

Q35. சலங்கை ஒலியும் ( 0.5 ) மத்தள சத்தமும் ( 0.5 ) அனைவரையும் ஈர்த்தது. மொழி (1)

Q36. விக்ராந் தான் பார்த்த நடனத்தை ( 1 ) ஒரு சிறு தவறுமின்றி ஆடிக் காண்பித்ததே ( 1 ) அவர்கள் திகைக்கக் காரணம் ஆகும். மொழி (1)

Q37. முன்பின் தெரியாதவர்களை எவ்வாறு நம்பி ( 1 ) தங்களின் மகனை அனுப்புவது ( 1 ) என்று எண்ணியதால் பெற்றோர் தயங்கினார்கள். மொழி (1)

Q38. பரத நாட்டியத்தில் தலை சிறந்து விளங்கும் விஸ்வநாதரைக் காண்பதே அவர்களது நோக்கமாகும். ( 1 ) ஆனால், விஸ்வநாதர் எதையும் ஒரு முறைதான் கற்றுக்கொடுப்பார். ( 1 ) அவர்களுக்கு அந்தத் திறமை இல்லாததால் ( 0.5 ) அத்தகைய நினைவாற்றல் உடையவனைத் ( 0.5 ) தேடுவதற்காகப் பயணத்தை மேற்கொண்டனர். மொழி ( 1 )

Q39. ***<u>உங்கள் மகனுக்கு அந்த ஆற்றல் இயற்கையாகவே அமைந்துள்ளது</u>*** என்னும் வாக்கியத்தில் அந்த ஆற்றல் என்னும் சொற்றொடர் எதையும் ஒரு முறை பார்த்தால் ( 1 ) அதை நினைவில் வைத்துக்கொண்டு ( 0.5 ) அவ்வாறு செய்யும் திறனைக் ( 0.5 ) குறிக்கிறது. மொழி (1)

Q40. <u>சான்று 1</u>
அவர்களது மகனுக்கு சிறப்பான நினைவாற்றல் இயற்கையாகவே அமைந்துள்ளது என்று மூதாட்டி சொன்னதைச் செவியுற்ற விக்ரமின் பெற்றோர் மகிழ்ந்தாலும்( 1 ) முன்பின் தெரியாதவர்களை எவ்வாறு நம்பி அவர்களுடன் மகனை அனுப்புவது என்று குழப்பமுற்றனர் ( 1 ). மொழி ( 2 )

<u>சான்று 2</u>
தன் மகனைச் சிறந்த கல்விக்கூடங்களுக்கு அனுப்பிப் படிக்க வைக்கும் சக்தி அந்த ஏழைக் குடும்பத்தாருக்கு இல்லை. ( 1 ) அதனால் இதனைச் செவியுற்றதும் விக்ரமின் பெற்றோர் அந்த மூதாட்டியின் யோசனைக்கு இணங்கினர். ( 1 ) மொழி ( 2 )

www.testpapersfree.com